**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**O.S. No. 39/2019**

பெயர் :– தமிழரசி (P.W.–1)
க/பெ. :– நடேசன்
தேதி :– 25.10.2025.
சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
1, 2, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

கிருஷ்ணமூர்த்தி என்பவர் எனது மாமனார் ஆவார். எனது கணவர் நடேசன் காலமாகிவிட்டார். கிருஷ்ணமூர்த்திக்கு அருமை நாதன், ராஜா, காவேரி, கமலா, தனசேகரன், நடேசன், விஜயகுமார், இந்திரஜோதி, ஜோதி, இந்திரா வாரிசுகளாவார்கள். எனது கணவர் இறந்துபோனதால் தமிழரசியாகிய நான் கார்த்தி,. பவித்ரா ஆகியோரும் வாரிசுகளாவார்கள் என்றால் சரிதான். கார்த்தி திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார். எனது மாமனார் கிருஷ்ணமூர்த்தி உயிருடன் இருக்கும்போது அவர் 19.12.1994ஆம் வருடம் ஒரு பதிவான உயில் பத்திரம் எழுதிவைத்துள்ளார். அதன் அசல் தான் பி.வா.சா.ஆ.1 ஆகும். அவர் இறந்த பிறகு தாவா சொத்துக்கள் குறித்து சரிவர பிரித்து தரவில்லை. எனது கணவர் 15 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். ஆனால் எப்போது இறந்தார் என எனக்கு தெரியவில்லை. நடேசனின் கையொப்பம் தெரியுமா என்றால் என்னிடம் காண்பிக்கப்படும் 15.08.2004ல் உள்ள சம்மத பத்திரத்தில் உள்ள கையொப்பம் எனது கணவரின் கையொப்பம் என்றால் சரியல்ல.

எனது மாமனார் இறந்த பின்னர் எனது கணவர் நடேசன் உயிருடன் இருக்கும்போதே சொத்துக்களை பிரிவினை செய்து பிரித்துக்கொண்டோம் என்றால் இல்லை. நான் கையொப்பம் தமிழிலும், ஆங்கிலத்திலும் போடுவேன். நான் தற்சமயம் வசித்துவரும் விலாசம் என்பது 1B/B திருமஞ்சண வீதி, கூறைநாடு என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் சம்மத பத்திரத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. எனது கணவர் மற்றும் எனது மகன் காரத்தி ஆகியோர்கள் உயிருடன் இருக்கும்போதே விஜயகுமார், வெங்கடேசன் ஆகியோர்கள் சாட்சியாக வைத்து தாவா சொத்தில் உயிலின் அடிப்படையில் பிரித்துக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனது பாக இடத்திற்கு பட்டா வாங்கிவிட்டீர்களா என்றால்

வாங்கவில்லை. நான் தற்போது குடியிருந்துவரும் இடம் தோராயமாக எத்தனை சதுர அடி இருக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை.

அந்த இடத்திற்கு மனைவரி தோராய பட்டா வழுங்கப்பட்டு விட்டது என்றால் அந்த இடம் யாருக்கும் பிரிக்கப்படவில்லை அதனால் அந்த இடத்திற்கு மனைவரி பட்டா வழுங்கவில்லை. சொத்தானது உயிலின் அடிப்படையில் பிரித்தாகிவிட்டது என்றாலும், அதன் அடிப்படையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை நான் எனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி உயிருடன் இருந்த காலத்தில் அவர் கை காட்டிய இடத்தில் குடியிருந்து வருகிறோம். அவ்வாறு அவர் கை காட்டிய இடத்திற்கு நீளம், அகலம் எனக்கு தெரியாது. அந்த இடத்தை தற்சமயம் நான் எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டதால் வாடகைக்கு விட்டுள்ளேன். வாடகை என்பது மாதம் ரூ.3000/- ஆகும்,. அந்த இடத்திற்கு மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் எனது கணவர் பெயரில் உள்ளது. எனது கணவர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே அந்த இடத்திற்கு மின் இணைப்பு அவர் பெற்றிருந்தார். அதனை தொடர்ந்து தற்சமயம் வாடகைக்கு குடியிருப்பவர்கள் தொடர்ந்து மின் கட்டணம் செலுத்தி வருகிறார்கள்.

நடேசன் உயிருடன் இருக்கும் காலத்திலேயே தாவா சொத்தினை பிரித்து அதில் மின் இணைப்பு வாங்கிவிட்டீர்கள் என்றால் இல்லை. நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மாமனார் இறந்த வருடமும் எனக்கு தெரியாது. அவர் இறந்து 20 வருடங்களுக்கு மேலாக இருக்கும், அவர் உயிருடன் இருக்கும்போதே அவர் காட்டிய இடத்தில் எனது கணவர் மற்றும் அவரது சகோதரர்கள் இருந்து வருகிறோம். நான் கோரிபடி பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.